# யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகம் - நிறுவன ஆவணப்படுத்தல்

## அறிமுகமும் பின்புலமும்

நூலக நிறுவனமானது இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த வெளியில் அனைவரும் பயன்பெறும் வகையில் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை மேற்கொள்ளும் இலாப நோக்கமற்ற நிறுவனமாகும். 2005 முதல் திறந்த, கூட்டுச் செயற்பாட்டை முன்னிறுத்திச் செயற்பட்டு வரும் நூலக நிறுவனம் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான ஒரு முதன்மையான உசாத்துணைத் திரட்டினை உருவாக்கியுள்ளது. பல்வேறு செயற்றிட்டங்கள் மூலம் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

அச்சு ஆவணங்களின் எண்ணிம வடிவங்கள் www.noolaham.org வழியாகவும் பல்லூடக ஆவணங்கள் www.noolaham.media வழியாகவும் திறந்த வெளியில் அனைவருக்கும் இலவசமாக வழங்கப்படுகின்றன. எழுத்தாவணங்களில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், சிறுநூல்கள், மலர்கள், நினைவு மலர்கள் ஆகியனவும் பல்லூடக ஆவணங்களில் ஒளிப்படங்கள், வாய்மொழி வரலாறுகள், பல்லூடக ஆவணங்கள், ஒலிப்பதிவுகள், காணொலிகள், கையெழுத்து ஆவணங்கள், குறுங்கால ஆவணங்கள், கல்வி வளங்கள் போன்றனவும் உள்ளடங்குகின்றன. இந்த ஆவணங்கள் பல்வேறு சிறப்புச் சேகரங்களாகவும் ஆய்வுப்பொருட் சேகரங்களாகவும் தொகுக்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்படுகின்றன.

## செயற்றிட்ட அறிமுகம்

யாழ்ப்பாணக் கல்லூரி ஏற்கனவே கொண்டிருந்த வெளிநிலைப்பட்டப்படிப்புகள் அலகின் நூலக வளங்கள், குறிப்பிடக் கூடிய வகையில் பல்கலைக்கழகக் கல்வியின் ஆரம்ப முன்னெடுப்புக்களுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. இதன் வளர்ச்சியில் யாழ்ப்பாணத்தில் நிலவி வந்த அசாதாரணமான சூழ்நிலைகளும் காலத்திற்குக் காலம் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளன. குறிப்பாக 1987ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படை காலத்திலும் பின் 1996 ஆம் ஆண்டின் இடப்பெயர்வின் போதும் நூலகம் இழப்புக்களை சந்தித்தது.

யாழ் பல்கலைக்கழக நூலகம் விஞ்ஞான பீடத்திற்கும் கலைப்பீடத்திற்கும் நடுவில் பார்வதி பரமேஸ்வரன் ஆலயத்திற்கு தென்மேற்கில் இராமநாதன் வீதியை நோக்கி அமைந்துள்ளது. இக்கட்டிடம் 1980 ஆம் ஆண்டில் அடிக்கல் நாட்டப்பட்டு 2000 ஆம் ஆண்டு வரையில் கட்டி முடிக்கப்பட்டது. இக்கட்டிடம் மையப்பகுதியில் இரண்டு மாடிக் கட்டிடமாக உள்ளது.

ஆரம்ப காலத்தில், பரமேஸ்வராக் கல்லூரியில் தற்காலமாக ஒரு கட்டிடத்தில் மனிதப்பண்பியல் பீடத்திற்கான நூலகமும், வட்டுக்கோட்டையில் அறிவியல் பீட நூலகமும் ஆரம்பிக்கப்பட்டன. பிரதான நூலகத்தின் கட்டிடத்தொகுதியின் ஒருபகுதி நிறைவு பெற்றபின் 1982 ஆம் ஆண்டு மனிதப்பண்பியல் பீடத்திற்கான நூலகமும், விஞ்ஞானபீட நூலகமும் இணைக்கப்பட்டு பிரதான நூலகமாக இயங்கத் தொடங்கியது. மேலும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கற்கை நெறிகளுக்கேற்ப கிளை நூலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. மருத்துவ பீடநூலகம், விவசாய பீடநூலகம், சித்த மருத்துவ நூலகம், இராமநாதன் நுண்கலை நூலகம் என்பன கிளை நூலகங்களாகும்.

பரமேசுவராக் கல்லூரியில் சேர் பொன். இராமநாதன் அவர்களின் நூலகத்தில் இருந்த அரிய நூல்களையும் யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம் கொண்டிருந்த 30,000 வரையிலான நூல்களையும் மேலும் பருவ இதழ்கள், அரச ஆவணங்கள், சிறு பிரசுரங்கள் போன்றவற்றையும் கொண்டு யாழ் வளாகம் தன் நூலகச் செயற்கைகளைத் தொடங்கியது. பிற்காலத்தில் 1980 - 1983ஆம் ஆண்டுகளில் அரச கட்டளைப்படி யாழ்ப்பாணக் கல்லூரியின் நூல்கள் திருப்பி ஒப்படைக்கப்பட்டன. இராமநாதன் நூலகத்தில் இருந்த நூல்கள் பற்றிய பதிவுகள் பேணப்படாமையால் அந்நூல்கள் அனைத்தும் நூலகத்திற்கு வந்து சேர்ந்தனவா என்பதில் தெளிவில்லை.

## செயற்றிட்ட நோக்கம்

இந் நூலகத்தின் தகவல் வளங்கள் என்பது பெரும் அளவில் ஆவணம் சார்ந்தவையேயாகும். அவற்றிலும் பெருமளவில் நூல்களே உள்ளன. இவற்றைவிட பருவ இதழ்கள், குறிப்பிடக் கூடிய அளவிலும், இலத்திரனியல் சாதனங்கள் எண்ணக்கூடிய அளவிலும் உள்ளன. இதுவரை சேர்வுடாப்பில் 1.8 இலட்சம் பதிவுகளுக்கு மேல் உள்ளன. 461 தலைப்புக்களில் பருவ இதழ்கள் இந்நூலகத்தில் காணப்படுகின்றன.

## செயற்றிட்ட அடைவுகள்

இதுவரை இந்த நூலகத்தின் சேர்வுடாப்பில் 1.8 இலட்சம் பதிவுகள் மற்றும். 461 தலைப்புக்களில் காணப்படும் பருவ இதழ்கள் மேலும் சேர்வுடாப்பில் சேர்க்கப்படாமல் ஏதேனும் ஆவணங்கள் இருப்பின் அவற்றையும் அடையாளம் கண்டு எண்ணிமப்படுத்தி பாதுகாத்தல்.

## செயற்றிட்ட காலவரையறை

இச் செயற்றிட்டமானது ஒரு வருட காலப்பகுதியைக் கொண்டுள்ளது. இக்காலப்பகுதிக்குள் நூலகத்திலுள்ள அனைத்து ஆவணங்களும் எண்ணிமப்படுத்தப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டு இச்செயற்றிட்டத்தின் நோக்கம் பூரணப்படுத்தப்படும்

எதிர்பாக்கப்படும் செலவீனம்
**LKR 4,657,574**

மேலதிக விபரங்களுக்கு
**https://docs.google.com/spreadsheets/d/1AKawT6TUJngsNqaIigpdR5Gm4PiZ6FnAWUw4YVRSM8A/edit#gid=1017615132**